**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2056, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 22–ம் தேதி**
**2026 ம் ஆண்டு மே மாதம் 05–ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**குற்றபல்வகை மனு எண்.790/2025**

J.பொன்ஈஸ்வரமூர்த்தி .....மனுதாரர்/புகார்தாரர்

–எதிர்–

1.காவல்துறை காவல் ஆய்வாளர்
திருப்புவனம் காவல் நிலையம்,
திருப்புவனம் ... எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்னிலையில் இறுதி விசாரணைக்காக 27.04.2026–ம் தேதி வந்த போது மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தை கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

சீதாலெட்சுமி, புனிதகுமார் அவரது மனைவி லட்சுமி, திலகர், VAO கருப்புசாமி த/பெ.கிருஷ்ணன், முத்து ஆகியோர்கள் மற்றும் அடையாளம் தெரிந்த மற்றும் ஊர், பெயர் தெரியாத 30க்கும் மேற்பட்ட அடியாட்கள் மீது பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் 2023 பிரிவுகள் 191(2), 61(2), 126(2), 296, 115(2), 190, 191(3), 351(2), 324(4), 326 (a), 329(3)ன் படி குற்ற வழக்கு பதிவு செய்து விசாரணை நடவடிக்கை எடுக்கும்படி திருப்புவனம் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 2023 பிரிவு 175(3)ன் படி உரிய Direction மற்றும் உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் இந்த நிர் வழக்கின் மனுதாரர்/புகார்தார் ஆவார் என்றும், மனு ஆவணங்களின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக்கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், தான் வழக்கறிஞராக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் பணிபுரிந்து வருவதாகவும், தானும், மணலூரை சேர்ந்த K.M.பாரி மற்றும் திருப்புவனம் டவுனை சேர்ந்த ஜெயசீத்தாமன் ஆகிய மூவரும் சேர்ந்து சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தாலுகா, கொத்தங்குளம் குரூப், புல எண். 42/2–ல் உள்ள 4 ஏக்கர் 50 செண்ட் விஸ்தீரணம், பட்டா எண். 1631–ன் கீழ் உள்ள நன்செய் நிலத்தை டாக்டர். காமாட்சி (எ) காமேஸ்வரன் அவர்களிடமிருந்து கிரையமாக கடந்த 20.08.2024ம் தேதி ஆவண எண். 4483/2024 மூலம் திருப்புவனம் சார்பதிவாளர்


VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.05.05 16:08:34 +0530

அலுவலகத்தில் வைத்து கிரையம் பெற்றோம். மேற்படி நிலத்தை கிரையம் பெற்ற நாள்முதல் இதுநாள் வரையில் நாங்கள் மூவரும் தங்கள் முழு அனுபவத்திலும், ஆளுகையிலும் வைத்து தென்னங்கன்றுகளை நடவு செய்து விவசாயம் செய்து வருகின்றோம் என்றும், மேற்படி சொத்தும் மதுரை இராமேஸ்வரம் நான்கு வழி சாலையிலிருந்து வலது பக்கமாக பிரிந்து கொத்தங்குளம் செல்லும் சாலையில் உள்ளது என்றும், மேற்படி நிலத்தை தாங்கள் கிரையம் பெற்று தங்கள் தனித்த அனுபவத்தில் வைத்திருந்த நிலையில், மேற்படி நிலத்திற்கு எவ்வித உரிமையும் இல்லாத திருப்பாச்சேத்தியை சேர்ந்த சீதாலெட்சுமி, அவரது மகன் முத்து, ஆலங்குளம் கிராமத்தைச் சேர்ந்த புனிதகுமார், அவரது மனைவி லெட்சுமி, திலகர், VAO கருப்புசாமி த/பெ. கிருஷ்ணன் ஆகியோர்கள் கூட்டு சேர்ந்து தங்களது மேற்படி இடத்தை சட்டத்திற்கு முரணாக ஆக்கிரமித்து அபகரிக்கும் எண்ணத்துடன் எங்களுக்கு பலமுறை பலவகையில் தொந்தரவு அளித்து வந்தனர் என்றும், இது குறித்து திருப்புவனம் காவல் நிலையத்தில் பலமுறை புகார் அளித்துள்ளேன் என்றும், ஆனால், திருப்புவனம் காவல்நலையத்தார்கள் இது சிவில் பிரச்சனை நாங்கள் தலையிட இயலாது என்று கூறி எனது புகாரை வாங்க மறுத்து விட்டார்கள் என்றும், எனவே மேற்படி நபர்களின் சட்ட விரோத செயல்களில் இருந்து தங்களுக்கு சொந்தமான 4 ஏக்கர் 50 செண்ட் விவசாய நிலத்தில் நடவு செய்துள்ள 550 தென்னங்கன்றுகளை பாதுகாப்பதற்காக ஆலங்குளம் கிராமத்தை சேர்ந்த சுந்தரலிங்கம் என்பவரை இடத்தின் காவலுக்காக நியமித்தோம் என்றும், இந்நிலையில் கடந்த 08.07.2025-ம் தேதி எங்களது காவலர் சுந்தரலிங்கம் எங்களது இடத்தில் காவலில் இருந்தபோது அடையாளம் தெரிந்த பெயர், ஊர் தெரியாத மூன்று நபர்கள் வந்து "இங்கு காவலில் இருந்தால் கொலை செய்து விடுவோம்" என்று கூறி கொலை மிரட்டல் விடுத்து சென்றுள்ளனர் என்றும், இது சம்பந்தமாக தனக்கு தகவல் கிடைத்து மேற்படி பிரச்சனை குறித்து விசாரித்த பொழுது மேற்படி புனிதகுமார், VAO கருப்புசாமி த/பெ. கிருஷ்ணன், முத்து, திலகர் ஆகியோர்கள் தான் பிரச்சனை செய்துள்ளார்கள் என்று தெரிய வந்தது. மேற்படி கொலை மிரட்டல் சம்பந்தமாக திருப்புவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். ஆனால், மேற்படி நபர்கள் ஆள் பலம், அதிகார பலம் மிக்கவர்கள் என்பதால் எங்களது புகாரை ஒரு பொருட்டாக கூட மதிக்காமல் மேற்படி நபர்கள் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்தார்கள். அதனால் மேற்படி எங்களது நிலத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தி பாதுகாத்து வந்தோம் என்றும், மேலும், மேற்படி காரணங்களினால் தங்களுக்கும், மேற்படி ஆறு நபர்களும் விரோதம் ஏற்பட்டு முன்பகை இருந்து வந்தது என்றும், இதனை தொடர்ந்து மேற்படி சீதாலெட்சுமி, அவரது மகன் முத்து, புனிதகுமார், அவரது மனைவி லட்சுமி, திலகர், VAO கருப்புசாமி த/பெ. கிருஷ்ணன் ஆகியோர்கள் மேற்படி தங்களுக்கு செந்தமான விவசாய நிலத்தில் நாங்கள் நடவு செய்துள்ள தென்னங்கன்றுகளை அழித்து, தென்னங்கன்றுகளுக்கு தண்ணீர் பாய்ச்சும் வாய்க்கால்களையும், வயலையும் டிராக்டர் கொண்டு உழுது, அதன்பின்னர், அவர்கள் கொண்டு வந்த 2 டிராக்டர்கள் மற்றும் ஆயுதங்களை கொண்டு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.05.05 16:08:39 +0530

வயலில் நடப்பட்டிருந்த தென்னங்கன்றுகளை (5 இலட்சம் மதிப்புள்ள சுமார் 550 கன்றுகள்) சட்டத்திற்கு புறம்பாக அத்துமீறி எங்கள் நிலத்தில் நுழைந்து, அரிவாளை கொண்டு வெட்டியும் டிராக்டரால் உழுதும் நாசம் செய்துள்ளனர். மேற்படி டிராக்டர்களை கொண்டு எங்கள் நிலத்தில் போடப்பட்ட வாய்க்கால்களையும் உழுது நாசம் செய்தது மற்றும் அருவாளை கொண்டு தென்னங்கன்றுகளை வெட்டி நாசம் செய்தது ஆகியவை மேற்படி வயலில் பொருத்தியுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது. அந்த வீடியோவின் பென்டிரைவ் இத்துடன் இணைத்துள்ளேன் என்றும், மேலும், அந்த இடத்திலிருந்து போவதற்கு முன்பு "மேற்படி இடத்தை மேற்படி சீதாலெட்சுமி, புனிதகுமார், அவரது மனைவி லட்சுமி, திலகர், VAO கருப்புசாமி த/பெ. கிருஷ்ணன், முத்து ஆகியோருக்கு நாங்கள் கொடுக்கவில்லை என்றால், நிலத்தின் உரிமையாளராகிய தன்னையும், மற்ற இரண்டு உரிமையாளர்களையும் அடியாட்களை வைத்து வெட்டி கொன்று விடுவோம்" என்று தன் காவலாளியை அரிவாளை காட்டி மிரட்டி, தகாத வார்த்தைகளால் பேசிய புனிதகுமார், முத்து, திலகர் ஆகியோர்கள் வாகனத்தில் கட்டி வைத்திருந்த எனது காவலாளி சுந்தரலிங்கத்தை வண்டியோடு சேர்த்து எட்டி மிதித்து செத்து தொலைடா என்று நெஞ்சில் மிதித்து புனிதகுமார் கீழே தள்ளிவிட்டு சென்றுள்ளார் என்றும், மேற்படி சம்பவம் குறித்து தன் காவலாளி சுந்தரலிங்கம் தனக்கு தகவல் தெரிவித்தார் என்றும், அதனை தொடர்ந்து தான் கடந்த 11.10.2025ம் தேதி அன்று திருப்புவனம் காவல் நிலையத்தில் மேற்படி ஆறு நபர்கள் மற்றும் அடையாளம் தெரிந்த மற்றும் ஊர், பெயர் தெரியாத 30க்கும் மேற்பட்ட அடியாட்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இப்புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

**3)காவல்துறையினர் தரப்பு பதிலுரையின் சுருக்கம்**

மனுதாரர் பொன்ஈஸ்வரமூர்த்தி கொடுத்த புகார் மனுவை பார்வையிட்டு புகார்தாரரான மனுதாரர் பொன்ஈஸ்வரமூர்த்தி தரப்பில் பொன்ஈஸ்வரமூர்த்தி, 2.சுந்தரலிங்கம், 3.அன்பரசன் ஆகியோர்களை விசாரித்து மனுதாரர் தரப்பில் வாக்குமூலங்கள் மற்றும் புகார் மனுவுடன் சம்மந்தப்பட்ட சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பெறப்பட்டது என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் 1.சீதாலெட்சுமி, 2.புனிதகுமார், 3.திலகர், 4.கருப்புச்சாமி ஆகியோர்களை விசாரித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாக்குமூலங்கள் மற்றும் புகாருடன் சம்மந்தப்பட்ட சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பெறப்பட்டது என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள கொத்தங்குளம் குரூப் 42/2 ல் உள்ள 4 ஏக்கர் 50 சென்ட் விஸ்தீரணம் கொண்ட இடத்திற்கு மனுதாரர் பொன்ஈஸ்வரமூர்த்தி கடந்த 20.08.2024ம் தேதி ஆவண எண் 4483/2024 மூலம் திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து ராஜம்மாள் என்பவரது தத்து வாரிசாக சொல்லப்படும் டாக்டர் காமாட்சி என்ற காமேஸ்வரன் என்பவருடன் மூன்று நபர்களில் ஒருவராக கிரையம் பெற்று அனுபவத்தில் வைத்து வருவதாகவும், இதனிடையே மேற்படி இடத்தில் ரூபாய் ஐம்பது லட்சம் மதிப்புள்ள 550 தென்னங்கன்றுகள் நட்டு வைத்ததாகவும் அதை 'அத்துமீறி எதிர்மனுதாரர்களான சீதாலெட்சுமி வி.ஏ.ஓ கருப்புச்சாமி தூண்டுதலின் பேரில் மேற்படி இடத்திற்கு கடந்த 11.10.2025 மதியம் சுமார் 12.30 மணியளவில் வந்த



VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.05.05 16:08:44 +0530

புனிதகுமார், திலகர், முத்து ஆகியோர் கொலைமிரட்டல் செய்து மேற்படி தென்னங்கன்றுகளை அருவாளைக்கொண்டு வெட்டியும் நிலத்திற்கு போடப்பட்ட காவலாளி சுந்தரலிங்கத்தை நெஞ்சில் மிதித்து செத்து தொலைடா என்று கொலைமிரட்டல் செய்ததாகவும் மனுதாரர் தாக்கல் செய்த மனுவில் தெரிவித்துள்ளார் என்றும், இப்புகாரில் சம்மந்தப்பட்ட இடமானது திருப்புவனம் தாலுகா கொத்தங்குளம் கிராமம் புல எண்–42/2 இடத்தில் அமைந்துள்ள 4 ஏக்கர் 50 செண்ட் நன்செய் நிலமாகும் மேற்படி இடம் சம்மந்தமாக ஏற்கனவே மனுதாரரான பொன்ஈஸ்வரமூர்த்தி என்பவர் மாண்புமிகு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கில் W.P.No.15341/2025 வழக்கில் விசாரணை செய்து 26.08.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் தாவா சொத்தின் பட்டாவானது மீண்டும் ராஜம்மாள் என்பவரது பெயருக்கே மீளாக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் இருதரப்பினரும் உரிய சிவில் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இப்பிரச்சனை சம்மந்தமாக மேல் விசாரணை செய்ய காவல் துறையினருக்கு அதிகாரம் இல்லை என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறார்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தகக்கதா இல்லையா? என்பதே ஆகும்

5)இருபுறமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) மனுதாரர் இந்த நிர் மனுவை பிரிவு 175(3) BNSSன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட வேண்டுமாய் மனு அபிடவிட்டாக தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மனு அபிடவிட்டை பரிசீலனை செய்கையில் மனுதாரரும் அவருடன் சேர்ந்து மணலூரை சேர்ந்த K.M.பாரி மற்றும் திருப்புவனம் டவுனை சேர்ந்த ஜெயசீதாம்மன் ஆகிய மூவரும் சேர்ந்து சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தாலுகா,கொத்தமங்கலம் குரூப், புல எண்.42/2ல் உள்ள 4 ஏக்கர் 50 செண்ட் விஸ்தீரணம் கொண்ட சொத்தை டாக்டர் காமாட்சி என்கிற காமேஸ்வரன் அவர்களிடமிருந்து கிரையமாக கடந்த 20.08.2024ம் தேதி ஆவண எண்.4483/2024 மூலம் திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கிரையம் பெற்றதாகவும், மேற்படி நிலத்தை கிரையம் பெற்ற நாள் முதல் இதுநாள்வரையில் தாங்கள் மூவரும் தங்கள் முழு அனுபவத்திலும், ஆளுகையிலும் வைத்து தென்னங்கன்றுகளை நடவு செய்து விவசாயம் செய்து வருவதாகவும், மேற்படி சொத்தும் கொத்தங்குளம் செல்லும் சாலையில் உள்ளதாகவும், மேற்படி நிலத்திற்கு எவ்வித உரிமையும் இல்லாத திருப்பாச்சேத்தியை சேர்ந்த சீதாலெட்சுமி அவரது மகன் முத்து ஆலங்குளம் கிராமத்தை சேர்ந்த புனிதக்குமார் அவரது மனைவி லெட்சுமி, திலகர் விஏஓ கருப்பசாமி த/பெ.கிருஷ்ணன் ஆகியோர்கள் கூட்டு சேர்ந்து தங்களது மேற்படி இடத்தை சட்டத்திற்கு முரணாக ஆக்கிரமித்து அபகரிக்கும் எண்ணத்துடன் தங்களுக்கு பலமுறை பலவகையில் தொந்தரவு அளித்து வந்தனர் என்றும், இதுகுறித்து திருப்புவனம் காவல்நிலையத்தில் பலமுறை புகார் அளித்துள்ளதாகவும், ஆனால்



VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.05.05 16:08:49 +0530

திருப்புவன காவல்நிலையத்தார்கள் சிவில் பிரச்சனை என சொல்லி தலையிட இயலாது என்று கூறி மனுதாரரின் புகாரை வாங்க மறுத்துவிட்டதாகவும், மேற்படி சொத்தில் நடவு செய்துள்ள 550 தென்னங்கன்றுகளை பாதுகாப்பதற்காக ஆலங்குளம் கிராமத்தை சேர்ந்த சுந்தரலிங்கம் என்பவரை தங்கள் இடத்தில் காவலுக்காக நியமித்ததாகவும், இந்நிலையில் கடந்த 08.07.2025ம் தேதி காவலர் சுந்தரலிங்கம் மேற்படி இடத்தில் காவலில் இருந்த போது அடையாளம் தெரிந்த பெயர், ஊர் தெரியாத மூன்று நபர்கள் வந்து காவலில் இருந்தால் கொலை செய்துவிடுவோம் என்று கூறி கொலை மிரட்டல் விடுத்து சென்றுள்ளதாகவும், இதுசம்பந்தமாக மனுதாரருக்கு தகவல் கிடைத்து மேற்படி பிரச்சனை குறித்து விசாரித்த போது புனிதக்குமார், விஏஓ கருப்பசாமி, த/பெ.கிருஷ்ணன், முத்து, திலகர் ஆகியோர்கள் தான் பிரச்சனை செய்துள்ளார்கள் என்று தெரிய வந்ததாகவும், மேற்படி கொலை மிரட்டல் சம்பந்தமாக திருப்புவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் ஆனால் மேற்படி நபர்கள் ஆள்பலம், அதிகார பலம் மிக்கவர்கள் என்பதால் மனுதாரரின் புகாரை ஒரு பொருட்டாக கூட மதிக்காமல் மேற்படி நபர்கள் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்ததாகவும், ஆனால் மேற்படி மனுதாரரின் நிலத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தி பாதுகாத்து வந்ததாகவும், இதன் காரணமாக மனுதாரர் உள்பட அவரோடு சேர்ந்து கிரையம் வாங்கிய நபர்களுக்கும் மேற்படி ஆறு நபர்களுக்கும் விரோதம் ஏற்பட்டு முன் விரோதம் இருந்து வந்த நிலையில், இதனை தொடர்ந்து மேற்படி 6 நபர்களும் மனுதாரருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் நடவு செய்துள்ள தென்னங்கன்றுகளை அழித்து தென்னங்கன்றுகளுக்கு தண்ணீர் பாய்ச்சும் வயல்களையும் டிராக்டர் கொண்டு உழுது மேற்படி நிலத்தில் விவசாயம் செய்து வருவதை அழித்துவிட வேண்டும் என்ற உள்நோக்கத்தில் கூட்டு சதி செய்து அதன் தொடர்ச்சியாக கடந்த 11.10.2025ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் மேற்படி சீதாலெட்சுமி, விஏஓ கருப்புசாமி த/பெ.கிருஷ்ணன், லெட்சுமி ஆகியோர்களின் தூண்டுதலின் பேரில் மனுதாரரின் இடத்திற்கு 2 டிராக்டர்கள் மற்றும் பலர் இருசக்கர வாகனத்தில் அருவாள், வாள் மற்றும் பயங்கரமான ஆயுதங்களை தலைக்கு மேல் சுற்றிக்கொண்டு வந்த 30க்கும் மேற்படி அடியாட்களுடன் வந்த திலகர் புனிதகுமார், முத்து ஆகியோர்கள் "இன்னைக்கு எவன் வந்தாலும் தடுத்தாலும் அவனை வெட்டி இங்கேயே புதைச்சிடனும்" என்று சொல்லி கூச்சலிட்டு வந்ததாகவும், அதனை பார்த்த மேற்படி சொத்தில் காவல் இருந்த சுந்தரலிங்கம் மேற்படி நபர்களின் செயலை கண்டு பயந்துபோய் ஏன் இப்படி செய்கிறீர்கள்? என்று கேட்டதற்கு ஏன்டா கொம்மாலக்க நொண்டி பயலே நீ தான் அவிங்களுக்கு காவலாளியா? ஒழுங்கா இங்கிருந்து ஓடிவிடு இல்லையேல் உன்னை கொன்றுவிடுவேன் என புனிதகுமார், திலகர், முத்து மற்றும் மற்ற அடியாட்கள் மிரட்டியுள்ளதாகவும், அப்போது மேற்படி காவலாளி சுந்தரலிங்கம் போக மறுத்து அங்கேயே இருக்கவும், அதனால் ஆத்திரமடைந்த முத்து, புனிதகுமார் ஆகிய இருவரும் அங்கு நின்று கொண்டிருந்த அடியாட்களை பார்த்து அவனை பிடித்து வண்டியில கட்டுங்கடா என்று கூறியவுடன் மேற்படி திலகர் மற்றும் 3 அடியாட்கள் மேற்படி



VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.05.05 16:08:54 +0530

காவலாளியின் கழுத்தில் அரிவாளை வைத்து மிரட்டி ஊனமுற்றோர் என்று பாராமல் அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் கட்டி வைத்ததாகவும், அதன் பின்னர் அவர்கள் கொண்டு வந்த இரண்டு டிராக்டர்கள் மற்றும் ஆயுதங்களை கொண்டு வயலில் நடப்பட்டிருந்த தென்னங்கன்றுகளை (5 லட்சம் மதிப்புள்ள சுமார் 550 கன்றுகள்) சட்டத்திற்கு புறம்பாக அத்துமீறி மனுதாரர் இடத்தில் நுழைந்து அரிவாளை கொண்டு வெட்டியும், டிராக்டரால் உழுது நாசம் செய்ததாகவும், மேற்படி டிராக்டர்களை கொண்டு தங்கள் நிலங்களில் போடப்பட்ட வாய்க்கால்களை உழுது நாசம் செய்தது மற்றும் அரிவாள்களை கொண்டு தென்னங்கன்றுகளை வெட்டி நாசம் செய்தது ஆகியவை மேற்படி வயலில் பொருத்தியுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளதாகவும் அந்த வீடியோவின் பென்டிரைவ் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) மேற்படி இடத்தை சீதாலெட்சுமி, புனிதகுமார் அவரது மனைவி லெட்சுமி, திலகர் விஏஓ கருப்பசாமி த/பெ.கிருஷ்ணன், முத்து ஆகியோருக்கு நாங்கள் கொடுக்கவில்லை என்றால் நிலத்தின் உரிமையாளரான தன்னையும் மற்ற இரண்டு உரிமையாளர்களையும் அடியாட்கள் வைத்து கொன்றுவிடுவோம் என்று மேற்படி நிலத்தின் காவலாளியை அரிவாளை காட்டி மிரட்டி தகாத வார்த்தைகளால் பேசிய புனிதகுமார், முத்து, திலகர் ஆகியோர்கள் வண்டியில் கட்டி வைத்திருந்த காவலாளியை வண்டியோடு சேர்த்து எட்டி மிதித்து செத்து தொலைடா என்று நெஞ்சில் மிதித்து புனிதகுமார் கீழே தள்ளிவிட்டு சென்றதாகவும், மேற்படி சம்பவம் குறித்து மனுதாரரின் காவலாளி தகவல் தெரிவித்ததன் பேரில் மனுதாரர் கடந்த 11.10.2025ம் தேதி திருப்புவனம் காவல் நிலையத்தில் மேற்படி 6 நபர்கள் மற்றும் அடையாளம் தெரிந்த ஊர் பெயர் தெரியாத 30க்கும் மேலான அடியாட்கள் மீது புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகாரை பெற்றுக்கொண்டு காவல்நிலையத்தார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மேற்படி புகார் மனுவிற்கான மனு ரசீது கொடுக்கவில்லை என்றும் 5 நாட்கள் கழித்து தொடர் அலைக்கழிவிற்கு பின்னர் மனுதாரரின் புகார் மனுவிற்கான மனு ரசீதும் கடந்த 16.10.2025ம் தேதியில் வழங்கப்பட்டதாகவும், பின்னர் எதிரிகள் மீது சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும், பின்னீடு மேற்படி எதிரிகள் மீது குற்ற வழக்க பதிவு செய்ய வேண்டி கடந்த 25.10.2025ம் தேதி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் மற்றும் காவல் உயர் அதிகாரிகளுக்கும் எழுத்துபூர்வ புகார் மனு ஒன்றை பதிவு தபால் மூலம் அனுப்பியதாகவும், மேற்படி புகார் மனுவினை பதிவு தபால் மூலம் அனுப்பிய அஞ்சலக ரசீது மற்றும் மேற்படி புகார் மனுவினை பெற்றுக்கொண்டதற்கான இணையவழி ரசீது இந்நிர் மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், அதன்பின்னீடு சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களும் மனுதாரரின் புகார் மனு சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும், மேற்படி எதிரிகளின் செயலானது தங்களுக்கு மிகுந்த அச்சத்தையும் மன வேதனையையும் மிகுந்த பொருள் சேதத்தையும் ஏற்படுத்தி உள்ளதாகவும் இதனால் தங்களது உயிருக்கு ஆபத்து ஏற்படும்



VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.05.05 16:08:59 +0530

சூழல் உருவாகி உள்ளதாகவும், மேற்படி எதிரிகளும் பணபலம், அதிகாரபலம், ஆள்பலம் மிக்கவர்களாகவும், மேற்படி எதிரிகளின் செயலானது சட்டத்திற்கு விரோதமானதாகும் என்றும், மேற்படி எதிரிகளும் பாரதிய நியாய சன்ஹிதா சட்டபிரிவுகளின் கீழ் குற்ற செய்கை புரிந்துள்ளனர் என்றும், மனுதாரரும் பல்வேறு மனுக்கள் கொடுத்தும் திருப்புவனம் காவல்நிலையத்தார் எதிரிகள் மீது எவ்வித குற்ற வழக்கும் பதிவு செய்யாமல் தன்னை வீண் அழைக்கழிப்பு செய்து வருவதோடு இதுநாள் வரை யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மனுதாரரும் சட்டத்திற்கு உட்பட்டு அனைத்து வழிகளிலும் புகார் மனு கொடுத்தும் யாதொரு நடவடிக்கையும் காவல்நிலைய அதிகாரிகள் எடுக்காததால் இறுதியாக சமூகம் நீதிமன்றத்தை நாடி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே மேற்படி சீதாலெட்சுமி,புனிதகுமார் அவரது மனைவி லெட்சுமி, விஏஓ கருப்புசாமி ஆகியோர்களின் தூண்டுதலின் பேரில் புனிதகுமார், திலகர், முத்து மற்றும் 30 நபர்கள் மேற்படி மனுதாரர் சொத்தில் அருவாள், வாள் மற்றும் கொடுர ஆயுதங்களோடு 30க்கும் மேற்பட்ட அடியாட்களுடன் சட்டத்திற்கு புறம்பாக கூட்டு சதி செய்து அத்துமீறி நிலத்தை அபகரிக்கும் குற்றமுறு எண்ணத்துடன் கடந்த 11.10.2025ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் மனுதாரர் நிலத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்து காவலாளி சுந்தரலிங்கத்தை அருவாளை காட்டி கொலைமிரட்டல் விடுத்தும், தகாத வார்த்தையால் பேசியும் சட்டத்திற்கு முரணாக தடுத்து வைத்தும், கட்டி வைத்தும் காலால் எட்டி உதைத்தும் மேலும் டிராக்டர்கள் மற்றும் அரிவாள் மூலம் சுமார் 5 லட்சம் மதிப்புள்ள 550 தென்னங்கன்றுகளை அழித்து நாசம் செய்தும் மேற்படி சொத்தில் போடப்பட்ட தண்ணீர் பாய்ச்சும் வாய்க்கால்களை அழித்தும் தங்களுக்கும் தங்கள் காவலாளி சுந்தரலிங்கத்திற்கும் அரிவாளை காட்டி கொலைமிரட்டல் விடுத்த மேற்படி 6 நபர்கள் மீதும் மற்றும் அடையாளம் தெரிந்த மற்றும் ஊர் பெயர் தெரியாத 30க்கும் மேற்பட்ட அடியாட்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்து விசாரணை நடவடிக்கை எடுக்கும்படி திருப்புவனம் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மாறாக, எதிர்மனுதாரர் காவல்துறையினர் சார்பில் தாக்கல் செய்த பதிலுரையில் புகார் சம்பந்தப்பட்ட இடமானது திருப்புவனம் தாலுகா, கொத்தங்குளம் கிராமம், புல எண்.42/2 நிலத்தில் அமைந்துள்ள 4 ஏக்கர் 50 செண்ட் நஞ்சை நிலமாகும் என்றும், மேற்படி இடம் சம்பந்தமாக ஏற்கனவே மனுதாரரான பொன்ஈஸ்வரமூர்த்தி என்பவர் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைகிளையில் தொடரப்பட்ட WP No.15341/2025 வழக்கில் விசாரணை செய்து 26.08.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் தாவா சொத்தின் பட்டாவானது மீண்டும் ராஜாம்மாள் என்பவர் பெயருக்கே மீளாக்கம் செய்யப்பட வேண்டும் என்றும், இருதரப்பினரும் உரிய சிவில் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9) மேற்படி நீதிப்பேராணை மனுவில் ஏற்பட்ட உத்தரவை பரிசீலனை செய்கையில் இந்த நம்பர் மனுதாரர் மற்றும் இரு நபர்களுக்கு வழக்கு சொத்தை



VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.05.05 16:09:04 +0530

கிரையம் கொடுத்த காமாட்சி என்கிற காமேஸ்வரன் ராஜம்மாளின் வளர்ப்பு மகன் என்பதை அறிய முடிகிறது. மேற்படி சொத்து தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவில் மனுதாரரின் கிரையதாரரான காமாட்சி என்கிற காமேஸ்வரன் ராஜம்மாளின் சுவீகார புத்திரன் என்பதை நிரூபிக்க சுவீகார பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றும் எனவே பட்டாவை ராஜம்மாள் பெயரிலேயே மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மேற்படி உத்தரவில் சொத்து தொடர்பான உரிமைமூலம் குறித்து சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த நம்பர் மனுதாரர் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இந்த நிர் மனுவை பரிசீலனை செய்கையில் மனுதாரரின் கிரைய சொத்தில் சுமார் 550 தென்னங்கன்றுகள் பயிரிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாகவும், அதனை பாதுகாத்து வர சுந்தரலிங்கம் என்பவரை காவலராக நியமித்துள்ளதாகவும், அவரை மனுவில் தெரிவித்துள்ள 6 நபர்களின் தூண்டுதலின் பேரில் புனிதகுமார், திலகர், முத்து மற்றும் 30 நபர்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அத்துமீறி நுழைந்து மேற்படி காவலரை தாக்கி தாவா சொத்தில் அழிம்பு செய்து பொருள் சேதத்தையும் காவலர் சுந்தரலிங்கத்தை அடித்தும் காயப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மனுவில் எதிரிகளாக சொல்லப்பட்டுள்ள நபர்கள் பாரதிய நியாய சன்ஹிதா 2023ல் சொல்லப்பட்டுள்ள சட்டபிரிவுகளுக்கு கீழான குற்ற செயல்களில் ஈடுபட்டு கொள்தகு குற்றம் புரிந்துள்ளதாக தெரிய வருகிறது. எனவே மனுதாரர் கோரிய படி இந்த மனுதாரர் கொடுத்த புகார் மனு மீது முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து புலன் விசாரணை மேற்கொள்ள உத்தரவிட வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) **முடிவாக**, மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் கொடுத்த புகார் மனு மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள உத்தரவிடப்படுகிறது. இவ்வுத்தரவின் நகலை சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைக்க இந்நீதிமன்ற அலுவலகத்தினருக்கு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மே திங்கள் 05-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.05.05 16:09:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

குற்ற பல்வகை மனு எண். 790/2025

உத்தரவு

நாள்.05.05.2026